திரு. வி. கே. கோதண்டராமன் : அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தை நம்புங்கள் என்று சொன்னார்கள். நம்புகிறோம், ரொம்ப ரொம்ப நம்புகிறோம். எல்லா சர்க்கார்களையும் நம்பித்தான் வந்திருக்கிறோம். இதுவரை பினாமி நிலங்கள் எந்த அளவிற்கு எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்த விஷயம். ஆகவே உண்மையிலேயே பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை எடுத்துக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் இப்போது ஒருநபர்ருக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற நிலைமை இருக்கிறது. அதை மாற்றி ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர்கள்—நாட் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்ஸ்—என்ற அடிப்படையில் விதிவிலக்கும் இல்லாத நிலையில் திட்டவட்டமாக சட்டத்தை மாற்றியமைப்பதின் மூலமாகத்தான் உங்களுக்கு எந்தவிதமான சிக்கலும் இருக்காது. அப்போதுதான் மற்றவர்களுக்கு கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கும். அந்த அளவிற்கு ஒத்துழைப்பார்களா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் முதல் கேள்வி பினாமி நிலத்தைப் பற்றியது. 16, 18 ஆண்டு காலமாக பொருத்திருந்தவர்கள் இன்னும் சில காலம் பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய இரண்டாவது யோசனைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மருதூர் கிராமத்திலுள்ள காலி நிலம்.

* வினா எண் 319— திரு. சோ. ந. பழனிசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருவலூர் ஊராட்சி, மருதூர் கிராமம் நத்தம், எஸ். எப். 470 சாலையில் உள்ள காலி நிலம் ஏலத்தில் விடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

(இ) அதனை மீண்டும் எடுத்து அரிசனங்களுக்கு வழங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) இல்லை.

(ஆ) & (இ : இக் கேள்விக்கு இடமில்லை.